
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1299**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

**129**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




ஓவியம் : சிகரன்

# ஏமாற்றியாவது பதவி பெறுவதே, காங்கிரஸ் கொள்கை!

*'பொள்ளாச்சி ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு', 21.08.1936 அன்று நடைபெற்றது. அங்குள்ள நாடகக் கொட்டகையில், பகல் 12 மணிக்கு மாநாட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. பொள்ளாச்சி நகரின் முக்கிய வீதிகளில் தலைவர்களுக்கு வரவேற்பு வளைவுகளும் நீதி வாக்கியங்களும் எழுதிக் கட்டப்பட்டிருந்தன. சுற்றுவட்டாரப் பகுதியைச் சேர்ந்திருந்த பல்வேறு முக்கியப் பிரமுகர்கள் மற்றும் மாணவர்கள் மாநாட்டிற்குப் பெருந்திரளாக வந்திருந்தனர்.*

*பொள்ளாச்சி நகர பொதுமக்கள் சார்பாக மாநாட்டுத் தலைவர் பி.டி.ராஜன் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது. அதன் பின்னர், தலைமை உரையாற்றிய பி.டி.ராஜன், ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையும் எடுத்துக் கூறினார். "நமது கட்சியையும் நமது வேலைத் திட்டங்களையும் பாழ்படுத்தும் நோக்கத்துடன் காங்கிரஸ்காரர்கள் வீண் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அவர்களுடைய கிளர்ச்சியால், இதுவரை எவ்விதப் பயனுமே ஏற்படவில்லை. பொது ஜனங்களுக்குக் கஷ்டங்கள்தான் ஏற்பட்டன" என்றார்.*

*அப்போது அவரிடம் கேள்வி கேட்டு, அடையாளம் தெரியாத நபர் ஒருவர் கடிதம் ஒன்றைக் கொடுத்திருந்தார். "கேள்வி கேட்ட நபர் யார் என்று தெரிய, இவ்விடம் வந்தால் பதில் தருகிறேன்'' என்று பி.டி.ராஜன் கூறினார். ஆனால், அந்த நபர் எழுந்து முன் வரவே இல்லை. அதன் பிறகு, பெரியார் பேசும்போதும் இதேபோல அடையாளம் தெரியாத நபரின் கடிதம் பெரியாரிடம் வழங்கப்பட்டது. "நான் இப்பொழுது அதிகம் பேச விரும்பவில்லை எனது பிரசங்கத்தை மாலை மாநாட்டில் வைத்துக்கொள்கிறேன். ஆனால், எனக்கும் ஒரு காங்கிரஸ் நண்பர் கேள்விகள் கேட்டு கடிதம் கொடுத்திருக்கிறார். அவர் இப்பொழுது நம் முன் வர தைரியம் இல்லாமல்போனாலும், அந்தக் கேள்வி கேட்டவரை நான் பொருட்படுத்தியே இங்குள்ள உங்களுக்கும் பதில் கூறுகிறேன்" எனக்கூறி விளக்க மளித்தார்.*

*இறுதியில், கேள்வி கேட்ட நபர் எழுந்து வந்து, "பதில் திருப்தி அளிக்கிறது'' என்று ஒப்புக் கொண்டார். அத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்று, மதிய உணவுக்காக மாநாடு கலைந்தது. அப்போது, பொள்ளாச்சி நகராட்சியின் துணை சேர்மனாக இருந்த எஸ்.வி.வி.நாயுடு அவர்களுடைய பங்களாவில் பி.டி.ராஜன் உள்ளிட்ட பிரமுகர்களுக்கு மதிய விருந்து அளிக்கப்பட்டது.*

*மீண்டும் மாலை 3 மணிக்கு மாநாடு தொடங்கியவுடன், அன்றைய அரசியல் நிலைமை பற்றி பொன்னம்பலனார் விரிவாகப் பேசினார். அப்போது, காலையில் பி.டி.ராஜனிடம் கேள்வி கேட்ட நபர் வந்திருந்தார். அதனால், பி.டி. ராஜன் அவருக்கு பதிலளித்துப் பேசினார். அந்தப் பதில் தனக்கு ஏற்புடையதாக இருப்பதாக அவரும் ஒப்புக்கொண்டார்.*

*இறுதியில் நிறைவுரை ஆற்றிய பெரியார், "என்ன செய்தாவது, எப்படி வேண்டுமானாலும் ஏமாற்றியாவது பதவி பெற வேண்டியது இன்று காங்கிரஸின் ஜீவாதாரமான கொள்கையாக இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் பதவி மோகத்தில், தங்களுடைய கொள்கை, நாணயம் எல்லாவற்றையும் காற்றில் பறக்க விட்டு, பதவி ஆசை பிடித்து அலைகிறார்கள்" என்று விமர்சித்து, 'ஜஸ்டிஸ் - காங்கிரஸ் கட்சி போர்' எதற்காக என்பதை விளக்கினார். அத்துடன் மாநாடு முடிவுற்றது.*

**...கூட்டம் திரளும்**

## த.வெ.க. - ஆர்.எஸ்.எஸ். பின்னணி அம்பலமாகும்!

**த.**வெ.க. ஆட்சிக்கு வந்த பிறகு, தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, வட மாநிலங்களிலும் த.வெ.க. அரசு குறித்துப் பல போலியான தகவல்கள் உலா வருகின்றன. அதிலும், பல 'இந்தி இன்ஃபுளுயன்சர்கள்' நடிகர் விஜய் குறித்தும், அவர் ஆட்சியில் கொண்டுவராத பல போலியான திட்டங்கள் குறித்தும், தொடர்ந்து பேசிவருகின்றனர். இதன் பின்னணியில், ஆர்.எஸ்.எஸ். செயல்திட்டம் இருக்கலாம் என THE HARD LINE என்கிற இணைய ஊடகம் கட்டுரை வெளியிட்டுள்ளது.

பிரபாகரன் என்பவர் எழுதியுள்ள அந்தக் கட்டுரை முத்தாய்ப்பாகச் சொல்கையில், "ஆர்.எஸ்.எஸ்-ஸின் வழிநடத்தும் பா.ஜ.க. முதல் முறை ஆட்சியைப் பிடித்தபோது, தன் மீதான மதவாத விமர்சனங்களை மட்டுப்படுத்த, அப்துல் கலாமைக் குடியரசுத்தலைவர் ஆக்கியது. அதேபோல, மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசின் மீதான சாதியம் சார்ந்த விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, பட்டியலின மற்றும் பழங்குடியினச் சமூகத்தைச் சேர்ந்த ராம்நாத் கோவிந்த், திரவுபதி முர்மு ஆகியோரைக் குடியரசுத்தலைவர் இருக்கையில் அமர வைத்தது.

தற்போது, மோடிக்கு மாற்றாக ஒரு தலைவரைக் கட்டமைக்க வேண்டிய தேவை ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வுக்கு ஏற்பட்டுள்ளது. அதைப் புரிந்துகொண்ட விஜய், மோடியின் இடத்தைப் பிடிக்க 'ரூட் மாஃபியா' உதவியுடன் களமிறங்கியிருக்கிறார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் அதை ஏற்றுக்கொண்டுள்ளதையே இந்த மூன்று மாதச் செயல்பாடுகள் வெளிப்படையாகக் காட்டுகின்றன. ஜோசப் விஜய் என்பவர் கிறிஸ்தவச் சிறுபான்மையினராக இருப்பதும்; ஏற்கெனவே, மக்கள் மத்தியில் அறியப்பட்ட முகமாகத் திகழ்வதும் அவருக்கான கூடுதல் பலமாக இந்துத்துவ அமைப்பான ஆர்.எஸ்.எஸ். கருத இடமுள்ளது.

சுய சிந்தனையையோ சுய கருத்தையோ வெளிப்படுத்தாத நடிகர் விஜய்யைப் பிரதமராக்கினால், மோடியின் ஆட்சியில் செய்ததைவிடச் சிறப்பாக, ஆர்.எஸ்.எஸ்-ஸின் அனைத்துக் கொள்கைகளுக்கும் செயல்வடிவத்தைக் கொடுத்துவிட முடியும். கிறிஸ்தவத்தை முன்னிறுத்தி ஆட்சி செய்துகொண்டிருக்கும் உலகளாவிய வலது சாரி நாடுகளின் ஆதரவும் கிடைக்கும். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டே விஜய்க்கு இந்தியா முழுவதும் ஒரு பிம்பம் கட்டமைக்கப்பட்டு வருகிறது.

'அப்படி இல்லை' எனக் கூறி, போலி முகமூடியுடன் த.வெ.க. முன்னெடுக்கும் அரசியல் விரைவில் முடிவுக்கு வரும்; 'விஜய் - ஆர்.எஸ்.எஸ். பெற்றெடுத்த பிள்ளை' என்பதல்ல, 'ஆர்.எஸ்.எஸ். பெறவுள்ள பிள்ளைதான் விஜய்' என்பது விரைவில் அம்பலமாகும்" என்கிறது அந்தக் கட்டுரை.

## ஃப்ளாஷ்பேக்



கே.வி.ராஜ்குமார்



### வாழ்நாள் பேறு!

2013-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 17-ஆம் தேதி, எனது 61-வது பிறந்தநாள் அன்று, என் துணைவியார் போளூர் ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் ஆர்.பரமேஸ்வரி மற்றும் என் மகன் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி. ஆர்.சுரேஷ்பாபு ஆகியோருடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். தமிழர்களின் இதயத்தில் நிரந்தமாகக் குடியிருக்கும் தலைவரிடம் வாழ்த்துப் பெற்றது என் வாழ்நாள் பேறு!

**- கே.வி.ராஜ்குமார்,**
**கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர், போளூர்,**
**தலைவர் தென் இந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com


# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

**129**

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# நூலின் வழியே ஒரு நூலகம்!




*200 ஆண்டுக்காலம் இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் பேரரசிடமிருந்து அரசியல் விடுதலை பெற, 'இந்திய தேசிய இயக்கம்' போராடிக்கொண்டிருந்த சமகாலத்தில், 2000 ஆண்டுக்கால சாதிய ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்து, இந்தியாவின் பல பகுதிகளில் குரல்கள் பலவாறாக ஒலிக்கத் தொடங்கின. தமிழ்நாட்டில் 'திராவிட இயக்கம்', மகாராஷ்டிரத்தில் 'அம்பேத்கரிய இயக்கம்' போல் கேரளத்தில் சமூக விடுதலையை வேட்கையாகக் கொண்டு ஒலித்தது 'ஆசான் நாராயண குருவின் குரல்'.*

*அத்தகைய மாமனிதரின் வாழ்க்கையோடு கேரள அரசியல் வரலாற்றையும் தாங்கி, 720 பக்கங்களில் தமிழில் வெளியாகும் முதல் நூல், எழுத்தாளர் தமிழன் இளங்கோ அவர்கள் எழுதிய 'தெற்கின் புத்தர்: ஆசான் நாராயண குரு'. நன்செய் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.*

*1854-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், திருவோணம் கொண்டாடப்பட்ட மூன்றாவது நாள் பிறந்தவர் நாராயணன். கேரளத்தில் பல ஆண்டுக்காலம் சதுர்வர்ண கோட்பாட்டால் தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட ஈழவ சமூக மக்களின் விடுதலைக்காகப் போராடினார். இன்றைக்கு ஈழவ சமூக மக்கள் கேரள சமூகத்திலும் அரசியலிலும் மிகுந்த செல்வாக்குடன் விளங்க இவரது இயக்கமே முக்கியக் காரணியாகத் திகழ்ந்தது. அவரது பிறப்பு முதல் மறைவு வரையும் அதைத் தொடர்ந்து இன்று வரை அவர் கேரள சமூகத்தில் செலுத்திவரும் தாக்கத்தையும் இந்நூல் மிக விரிவாகப் பதிவுசெய்துள்ளது.*

*'ஒரு சாதி, ஒரு மதம், ஒரு கடவுள்' என்ற கோட்பாட்டை முன்னிறுத்தி, கேரள சமூகத்தில் அவர் மேற்கொண்ட சமூகச் சீர்திருத்தம், அங்கிருந்த ஈழ மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது. ஆலயம் அமைந்திருக்கும் தெருவில் நுழைய மேற்கொள்ளப்பட்ட 'வைக்கம் போராட்டம்' மூண்டெழ இந்த உணர்ச்சியும் முக்கியக் காரணமாக இருந்ததை இந்த நூலில் கவனப்படுத்துகிறார். அதைப் போலவே வைக்கம் போராட்டத்தின்போது, பெரியார் தனது உரைகளிலும் கட்டுரைகளிலும் நாராயண குரு அவர்களை சுவாமி என்றே விளித்து, அவர் குறித்து தொடர்ந்து பதிவுசெய்துவந்த செய்திகளையும் இதில் வழங்கி இருக்கிறார்.*

*கேரளத்தில் நாராயண குருவுக்குத் துணையாகவும், அவர் மறைந்த பிறகு, அந்த இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றவர்கள் பற்றிய குறிப்பும் இதில் அடங்கியிருக்கிறது. ஆசான் நாராயண குரு எழுதிய கவிதைகள் சிலவும், அவர் நிறுவிய கோயில் களின் பட்டியலும் அவரது எள்ளல் நடை உரையாடல்களும் அவருக்குத் தமிழ்நாட்டில் கிடைத்த வரவேற்பும் இதில் பதிவுசெய்யப் பட்டுள்ளன.*

*இந்த நூலை, நாராயண குரு அவர்களின் வாழ்க்கை வரலாறு என்ற சிறு சட்டகத்திற்குள் அடைக்க முடியாது. ஆன்மிகத் தத்துவம் முதல் சமூக இயக்க வரலாறு வரை விரியும் இந்நூல், நமக்குள் ஏற்படுத்தும் தேடல், பல நூல்களை நோக்கி இட்டுச்செல்லும் தன்மை கொண்டது. தமிழில் மிக அரிதாகவே வெளியாகும் தரமான நூல்களின் பட்டியலில் இந்நூலுக்கு தனியிடம் உண்டு என்பதை அறுதியிட்டுச் சொல்லலாம். திராவிட இயக்கத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ஒருவரிடமிருந்து இந்நூல் வெளிவருவது பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியது!*

> **"திராவிட இயக்கத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ஒருவரிடமிருந்து இந்நூல் வெளிவருவது பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியது!"**

**...வாசிப்போம்.**

## ம.லூருகு

### அண்ணா தந்த விளக்கம்!

1962-ஆம் ஆண்டு மே முதல் நாள். மாநிலங்களவையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் முதல் முழக்கம் ஒலித்தது. குடியரசுத்தலைவர் உரைமீது அவர் ஆற்றிய சொற்பொழிவு குறித்து, டெல்லியில் இருந்து வெளியான 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை, "தி.மு.கழகத் தலைவர் திரு. சி.என்.அண்ணாதுரை, தென்னகத்திற்குச் சுய நிர்ணய உரிமை வேண்டுமென்ற கோரிக்கையைத் தெளிவாக எடுத்துரைத்தார். மாநிலங்களவை இன்று கூடியிருந்து, திராவிட நாட்டின் கொள்கைக்காகப் பாடுபடும் சொல்லாற்றல் மிக்க தலைவரின் பேச்சைக் கேட்டது. தேசியத்திற்கு அவர் ஒரு புதிய விதியைத் தந்தார்'' என்று குறிப்பிட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900